DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : **CC.No. 268 /2025**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for: Pw. 3

Name : சிவசக்தி (Pw.3 )
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day January of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குரண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியும், நானும் உறவினர்கள் ஆவோம். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்ககோரி வேண்டுதல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதின் பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)**

**அ.த.கு.வி :-**

அசா.1 க்கும், எதிரிக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது என்றும், 26.11.2015 ம் தேதியன்று காலையில் ஆஜர் எதிரி செல்லத்துரை கடலை பிடுங்குவதற்காக அவரது ஆட்களை TN 59 R 3443 என்ற ஈச்சர் வாகனத்தில் கூட்டி கொண்டு வந்த போது காலை 7.00 மணியளவில் நானும் எனது நிலத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்த போது வேனில்

இருந்து இறங்கிய செல்லத்துரை கடலை செடிகளை பிடிங்கி பார்த்தார் என்றும், அவருடன் வந்த நபர்களும் வேனில் இருந்து கீழே இறங்கினார்கள் என்றும், அப்போது அங்கிருந்த பேச்சியம்மாள் செல்லத்துரையை சத்தம் போட்டு தடுத்தார் என்றும், அதற்கு பேச்சியம்மாளை செல்லத்துரை அசிங்கமாக பேசி அப்படிதான் நான் செடியை பிடுங்குவேன் என்று சொன்னார் என்றும், அப்போது அங்கு வந்த லெக்குபிள்ளை, முத்துகனி ஆகியோர்கள் செல்லத்துரையை சத்தம் போட்டு தடுத்தார்கள் என்றும், அப்போது செல்லத்துரை பேச்சியம்மாளையும், முத்துக்கனியையும் கையால் உடம்பில் தாக்கினார் என்றும், அவர்கள் இருவரையும் மிரட்டி கொன்று விடுவேன் என்று மிரட்டினார் என்றும், நான் சண்டை வந்து விடக்கூடாது என்பதால் சத்தம் போட்டேன் என்றும், அதன் பிறகு ஆவியூர் போலீசார் வந்து செல்லத்துரையை சத்தம் போட்டு அனுப்பி விட்டார்கள் என்றும், செல்லத்துரை பிடிங்கி போட்ட கடலை செடியின் மதிப்பு ரூ.500 இருக்கும் என்றும், அந்த கடலை செடிகளை பேச்சியம்மாள் வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை